**SPT 10 Irangal urai**

# ஈ. வி . சிங்கன்
# எங்கள் தமிழ்ச் சிங்கன்
# இரங்கல் உரை

**24-5-2011**

காலஞ்சென்ற ஈ. வி சிங்கன் அவர்களை நான் சென்ற நாற்பது ஆண்டுகளாக நன்கு அறிவேன். தன்னிகரற்ற தமிழ்ப் பற்று உடையவர். தமிழ் நூல்களைத் தரணி முழுதும் சென்று பரப்புவதில் தளரா முயற்சி மேற்கொண்டவர். கதைகள், படங்கள், மொழிபெயர்ப்புகள்,நூல்கள் வாயிலாகத் திருக்குறளைப் பலரும் கற்கப் புதிய உத்திகளைப் புகுத்தி வகுப்புகள் நடத்த வழி கண்டவர். குவலயம் எங்கும் குறள் பரப்பும் பணியில் பல்லாண்டுகளாக ஈடுபட்டு வந்தவர். சைவவழிபாட்டு முறைகள் திருமுறைப்பாடல்கள் நூல்கள் பரவ ஒல்லும் வகையான் எல்லாம் ஓயாது பாடுபட்டவர். தமிழ் நூல்கள் வெளியீட்டு விற்பனைத் துறையில் சிங்கையின் முன்னோடியாக இருந்தவர். எளிய முறையில் தமிழ் கற்பதற்கு ஏற்ற துணைக் கருவிகளை உருவாக்கியவர். அவர் மறைவு தமிழுக்கு ஒரு பேரிழப்பு. அவர் ஆன்மா சாந்தி அடைய ஆண்டவனை வேண்டுகிறேன்.

# தெய்வானை ஆச்சி

உயர்திரு
டான் சிரி மு. சோமசுந்தரம் அவர்களுக்கு
கோலாலம்பூர்

பேரன்புமிக்க அண்ணன் அவர்களுக்கு

வணக்கம். தெய்வானை ஆச்சி அவர்களின் இறப்புச் செய்தி அறிந்து ஆறாத் துயருற்றோம். வள்ளுவன் வகுத்த வாழ்க்கைத் துணைநலம் இலக்கணத்திற்கு இலக்கியமாய் வாழ்ந்த ஆச்சி அவர்களின் இழப்புத் தங்களுக்குப் பேரிழப்பே ஆகும்.

ஆச்சி அவர்கள் கற்பில் கண்ணகியாய், கலையுள்ளத்தில் மாதவியாய், தொண்டுசெய்வதில் மணிமேகலையாய், அருள்நெறி தழைக்கச் செய்வதில் மங்கையர்க்கரசியாய், பக்தியில் காரைக்கால் அம்மையாராய், பலரை நன்னெறிப்படுத்துவதில் தூண்டுதவ விளக்கினராய திலகவதியாராய், துயர் தாங்குவதில் சீதையாய்,பாரதி கண்ட புதுமைப் பெண்ணாய், பாரதம் போற்றும் பண்பில் அன்னை கஸ்தூரிபாயாய், தியாக உணர்வில் அன்னை திரசாவாய்த் திகழ்ந்தவர்கள். இத்தனை பண்புகள் இணைந்திருந்தும் அடக்கத்தின் உருவமாய் அமைந்தவர்கள். பெண்மைக் குணங்கள் எல்லாம் நிறைந்த பெட்டகமாய், மனைத்தக்க மாண்புடையராய்க் குடும்ப விளக்காய் வாழ்ந்தவர்கள். சைவப் பெரியாரின் மகளாய், சைவ சித்தாந்தக் கலா நிதியின் மனைவியாய், நன்மக்களைப் பெற்ற தாயாய், பெருமை மிக்க பேரக் குழந்தைகளைப் பெற்ற பாட்டியாய், நட்பிற்கு இலக்கணமாகும் தோழியாய், நல்வழி காட்டும் தமக்கையாய், பலருக்கும் பரிவும் பாசமும் காட்டும் உடன்பிறப்பாய், எல்லாருக்கும் இனியவை கற்பிக்கும் ஆசிரியையாய், வாழ்ந்தார்கள். வாழ்வாங்கு வாழ்ந்த பெருமாட்டி. தங்கள் பெருமைக்கெல்லாம் பின்புலமாக இருந்தவர்கள்.

எங்கள் குடும்பத்தின்பால் அன்பும் பாசமும் பொழிந்தவர்கள். விருந்தோம்புதலில் நிகரற்று விளங்கியவர்கள்.

இக்கால மகளிர்க்கெல்லாம் ஓர் இலட்சியமாக வாழ்ந்து காட்டிய ஆச்சி அவர்களின் ஆன்மா இறைவன் இணையடி நீழல் எய்திட இறைஞ்சுகிறேன். குடும்பத் தலைவியைப் பிரிந்து வருந்தும் தங்களுக்கும் தங்கள் குடும்பத்தினருக்கும் எங்கள் அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

தங்கள் அன்புள்ள

சுப. திண்ணப்பன் தி. இந்திராள்

சிங்கப்பூர் 12-1-2008

உ
சிவமயம்

திருமதி கண்மணி அம்பலவாணர்.

தோன்றின் புகழொடு தோன்றுக அஃதுஇலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.

என்னும் வள்ளுவரின் வாக்கிற்கு ஏற்பத் திருமதி கண்மணி அம்பலவாணன் அவர்கள் அம்பலவாணரைக் கரம்பிடித்த நாள்முதல் தம் வாழ்நாள் முழுவதும் சைவத்திற்குத் தொண்டாற்றிச் சிங்கையில் புகழ் அடைந்தார் என்றால் அது மிகையாகாது. ஒவ்வொரு ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் இருப்பார் என்றால் திரு க அம்பலவாணர் அவர்களின் வெற்றிக்குப் பின்னால் இருந்தவர் கண்மணி அம்மையார் அவர்கள்தான்.

நம் நாயான்மார்களில் ஒருவர் சிவனைக் குறிப்பிடுகையில் கண்ணின் மணியாடு பாவாய் என்கிறார். திரு க அம்பலவாணர் தீ விபத்தில் தமது இரு கண்களையும் இழந்த பின்பு அவருக்குக் கண்களாக மட்டும் அல்லாமல் கண்ணின் மணியாக விளங்கியவர் திருமதி கண்மணி அம்மையார் அவர்கள். தம் வாழ்க்கையில் ஒரு தியாக சொரூபமாக இருந்து தமது கணவர்க்குப் பணிவிடைகள் செய்ததோடு அவரின் சைவப் பணிகளுக்கு முதுகெலும்பாய் அமைந்து சிங்கையில் சைவம் வளர நாளும் பாடுபட்டவர் கண்மணி அம்மையார் அவர்கள். திருமுறை மாநாட்டினைத் தம் சொந்த வீட்டு விழாவாகக் கருதி அதன் ஒவ்வொரு செயலிலும் சிறப்புக் கவனம் செலுத்தி மாநாட்டிற்குத் தூணாக நின்று அதனைத் தாங்கியவர். மாநாட்டு உறுப்பினர்களது வளர்ச்சியிலும் தனிக் கவனம் செலுத்தி அவர்களை ஊக்குவித்தவர். திருமுறை மாநாட்டு ஒருங்கிணைப்பாளராக இருந்து அனைவரையும் ஒருங்கிணைத்துச் சிறந்த தொண்டு ஆற்றியவர் அம்மையார் அவர்கள்.

செல்வர்க்கு அழகு செழுங்கிளை தாங்குதல் என்பது போல அம்மையார் அவர்கள் தமது குடும்ப உறுப்பினர்களின் வாழ்வில் மிக அக்கறை கொண்டு சகோதரிகளைக் கண்ணும் கருத்துமாகக் காத்து வளர்த்தார். அவரின் பெற்றோரின் இறப்பிற்குப் பின்பு கடைசி

மூன்று தங்கைமார்களுக்கும் ஒரு தாயாக இருந்து கல்வியும் மற்ற உதவிகளையும் அளித்தவர். அதிலும் திருமணம் ஆகாத தம் இரு சகோதரிகளைத் தமது நேரடிப் பார்வையிலேயே வைத்துப் பாதுகாத்து வந்தவர். அதுமட்டும் அல்லாது நலிந்தவர் யாராக இருந்தாலும் அவர்களது வாழ்க்கையைச் செம்மைப்படுத்த கைப்பொருளை வழங்கி ஆதரவு நல்கியவர்.

சாதாரண ஆங்கில ஆசிரியராகத் தம் வேலையைத் தொடங்கிய கண்மணி அம்மையார் மூத்த ஆசிரியராக ஓய்வுபெற்றார். தன் வாழ்க்கையில் ஏழை எளியவர்களுக்குச் சாதிமத பேதம் இன்றிக் கல்வியை வழங்கினார். ஓர் ஆசிரியர் செய்யும் செய்லகளுக்கு அப்பால் சென்று ஏழை எளிய மாணவர்களுக்குப் பொருள் உதவி செய்து கல்வி பயில உதவிசெய்தார். பின்தங்கிய மாணவர்களையும் பொருளாதாரத்தில் நலிவடைந்த மாணவர்களையும் தம் வீட்டிற்கு அழைத்துவந்து தனிப்பாடம் (Tuition) சொல்லிக்கொடுத்தார். அன்னசத்திரம் ஆயிரம் வைப்பதைக்காட்டிலும் ஒரு ஏழைக்குக் கல்வியை வழங்குதல் சிறப்பு என்னும் கருத்துக்கு எடுத்துக்காட்டாய் விளங்கினார்.

செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத்த வர்க்கு

என்னும் திருக்குறளுக்கு ஒப்பாக விருந்தோம்பலைப் போற்றியவர் அம்மையார் அவர்கள். தங்கள் வீடு நாடி வந்தவர் யாராக இருந்தாலும் அவர்களுக்கு இன்சுவை உணவு பரிமாறுவதில் அவருக்கு நிகர் அவரே ஆவார். அதுமட்டும் அல்லாமல் விருந்தினர் உணவு உண்டு வீட்டிற்குச் செல்லும்போது விருந்தினரின் வீட்டில் உள்ளவர்களுக்கும் உணவையும் அன்பளிப்பையும் சேர்த்துக் கொடுத்து அனுப்பும் விசாலமான உள்ளம் படைத்தவர். ஆன்மீக அடியார்களை உபசரிக்கும் போது பெரியோர்களின் உள்ளம் அறிந்து அவர்களது மனம் நிறைவு கொள்ளும் வண்ணம் கவனித்து விருந்தோம்பும் பண்பு கொண்டவர்கள் அம்மையார் அவர்கள். விருந்தோம்பும் பண்பைத் தலையாயப் பண்பாகக் கொண்டு வாழ்ந்தவர்கள்.

சிங்கையில் இருந்தபடியே இந்தியா, இலங்கை முதலிய நாடுகளில் உள்ள பல அமைப்புகளுக்கும் நிதி உதவி அளித்தும் மானசீகமுறையில் ஆதரவு நல்கியும் பல நற்செயல்களைச் செய்தவர். வலது கரம் செய்வதை இடது கரம் அறியாது

விளம்பரத்திற்கு வெளிச்சம் காட்டாது தமது பணிகளை நாளும் செய்த கண்மணி அம்மையார் சிங்கப்பூர் மங்கையர்க்கரசியாக, மங்கையருள் மாணிக்கமாக விளங்கினார் என்றால் அது மிகையாகாது.

திருமதி கண்மணி அம்பலவாணன் வாழ்க்கைக் குறிப்பு

| | |
|---|---|
| பிறந்த தேதி | : 26-4-1932 |
| பிறந்த இடம் | ஜொகூர் பாரு |
| கல்விச் சான்றிதழ் | "O" Level (English) |
| வேலை | தொடக்கப்பள்ளி ஆசிரியர் |
| வகித்த பதவி | Senior Teacher |
| வேலை செய்த ஆண்டுகள் | சுமார் 35 ஆண்டுகள் |
| கற்பித்த பள்ளிகள் | 1. May North Primary School<br>*2. Bendemeer Primary School*<br>*3. Pei Hwa Primary School* |
| திருமண நாள் | 9 4 1962 |
| உடன் பிறப்புகள் | ஆறு சகோதரிகள் |
| மறைவு | 22 7 2002 |
| தொண்டுகள் | ஒருங்கிணைப்பாளர் சிங்கப்பூர் திருமுறை மாநாட்டு ஏற்பாட்டுக்குழு |

பெற்றோரின் மறைவுக்குப் பின்னர் அன்னையின் வேண்டுகோளுக்கு இணங்கி இறக்கும் வரை தைப்பூசத் திருநாளில் தண்ணீர்ப் பந்தல் வைத்து நடத்தியது.

தமிழகத்திற்குக் செல்லும்போதெல்லாம் வடலூரில் உள்ள இராமலிங்க அடிகளின் பெயரில் அன்னதானம், துணிமணிகள் தானம் கொடுப்பது.

ஆண்டு தோறும் புரட்டாசி மாதத்தில் வரும் அமாவாசை அன்று உற்றார் உறவினர் மற்றும் நண்பர்களின் பெயருக்கு ஆத்ம சாந்தி பூசை செய்தல்

திருமுறை மாநாட்டிற்கு அவரது செலவில் அனைவருக்கும் தன் கைப்பட முகவரி எழுதி அழைப்பிதழ் அனுப்புதல்

ஆண்டுதோறும திருமுறை மாநாட்டிற்கு நன்கொடை கொடுத்தவர்களுக்கும் மற்றும் மாநாட்டோடு தொடர்பு உடையவர்களுக்கும் தீபாவளி வாழ்த்து அனுப்புதல்

உதவி நாடி வந்தவர்களுக்கு மனம் கோணாமல் உதவுதல்.

வலது கரம் கொடுப்பதை இடம் கரம் அறியாது தொண்டுகள் செய்தல். விளம்பரத்தை விரும்பாது தன் கடன் பணிசெய்து கிடப்பதுவே என்று எண்ணுதல்.

# என்றுநான் காண்பேன் இனி?

## டாக்டர் சுபதிண்ணப்பன் .

பேராசிரியர் சிங்கப்பூர் தேசிய பல்கலைக் கழகம்
சிம் பல்கலைக் கழகம்சிங்கப்பூர் ,

பெருமதிப்பிற்குரிய டான்ஸ்ரீ மு சோமசுந்தரனார் .(எம் .எஸ். சுந்தரம்) அவர்களை நான் கோலாலம்பூர் மலேயாப் பல்கலைக் கழக இந்திய ஆய்வுத் துறையில் பணியாற்ற வந்த ஆம் 1969 அப்போது அவர்கள் மலேசிய .ஆண்டு முதல் நன்கு அறிவேன் அரசாங்கத்தின் வருமான வரித்துறையின்இயக்குநர் தலைவராக இருந்தார்கள்மிகப் பெரிய பதவி வகித்தால .ும் தன்னடக்கத்தாலும் பணிவாலும் தமக்கு நிகரின்றி விளங்கிய தன்மையராய் இருக்கக் கண்டு வியந்தேன் .“பணியுமாம் என்றும் பெருமை சிறுமை அணியுமாம் தன்னை வியந்து” என்னும் திருக்குறளுக்கு எடுத்துக்காட்டாகத் திகழ்ந்தார்கள்.

அவர்கள் இல்லத்தில் வாரந்தோறும் ஞாயிற்றுக் கிழமைகளில் மாலை மணி வரை மூன்று ஆண்டுகள் 00 5 மணிமுதல் 00 3 .பெரியபுராணம் முழுவதும் பாடம் சொல்ல வாய்ப்பளித்தார்கள் அதனால் சிவக்கவிமணி சிகே எஸ் அவர்களின் பெரிய புராண உரைக் களஞ்சியத்தையும் ஏனைய திருமுறை நூல்களையும் பயிலும் வாய்ப்பு கிடைத்ததுஅவர்கள் மலேயா அர .ுள்நெறிக் கூட்டத் தலைவராக இருந்தபோது அடியார்கள் குருபூசை விழாக்களிலும் அந்தர்யோகம் முதலிய சிறப்பு நிகழ்ச்சிகளிலும் அரிய தலைப்புகளைத் தேர்ந்தெடுத்துத் தந்து என்னைச் சொற்பொழிவாற்றச் செய்தருளினார்கள்அதனால் நான் சைவ . .சித்தாந்த அறிவு ஓரளவு பெற முடிந்ததுஅவர்கள் தலைமையில் நான் பல நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு பேசும்போதெல்லாம் என்னைப் பாராட்டி எனக்கு ஊக்கமும் ஆக்கமும் ஊட்டி வந்தார்கள்சைவமாமணி முதலிய ,எனக்கு அருள்நெறிச் செல்வர் . .பட்டங்கள் கிடைக்கச் செய்து மகிழ்ந்தார்கள்

நான் இரண்டாம் முறை1979 -மலேயாப் பல்கல 82ைக் கழக இந்திய ஆய்வுத் துறையில் பணியாற்றப் பரிந்துரை செய்தவரகளில் டான்ஸ்ரீ மு பிறகு .சோமசுந்தரனார் ஒருவர் . இல் சிங்கப்பூரில் பணியாற்ற வரும்போது தக்க 1982 ஆலோசனைகள் தந்து பாராட்டுவிழாவெடுத்து வழிஅனுப்பி .வைத்த நிகழ்ச்சி என் மனத்தைவிட்டு என்றும் அகலாது பிறகு நானும் என்மனைவியும் கோலாலம்பூர் செல்லும்பொழுதெல்லாம் எங்களைத் தவறாது இல்லத்திற்கு நாங்கள் இருக்குமிடத்திற்குத் தாமே காரோட்டி வந்து அழைத்துச் சென்று நல்விருந்தோம்பி அளவளாவி மகிழும் அவர்களின் அன்பின் திறத்தை இன்று நினைத்தாலும் என் நெஞ்சம் நெகிழும்.

டான்ஸ்ரீ அவர்கள் அரசாங்கப் பதவி ஓய்வு பெற்றபின்பு சைவ சமயத் தோத்திர நூல்களையும் சைவசித்தாந்த சாத்திர நூல்களையும் முறையாகத் தாமே முயன்று கசடறக் கற்றும், தொடர்ந்து பல வகுப்புகள் நடத்தியும், ஆய்வுக்கட்டுரைகள் பலவற்றை எழுதியும் ஆழ்ந்தகன்ற புலமையுடையராய் விளங்கினார்கள்அவர்களின் புலமைத் திறத்தைப் போற்றிச் . சைவ ஆதீனங்களும் மடங்களும் சங்கங்களும் அளித்த விருதுகளும் பட்டங்களும் பலப்பலஅவற்றிற்கெல்லாம் தக்க . .தகுதியுடையார் இவர் எனத் தமிழ்ச் சைவ உலகமே போற்றியது டான்ஸ்ரீ தாம் அவ்வப்போது எழுதி வெளியிட்ட கட்டுரைத் தொகுப்பு நூல்களை எல்லாம் எனக்கு அனுப்பிவைப்பார்கள் . படித்து மகிழ்வதோடு எடுத்துக்கொண்டதலைப்புத் தொடர்பான தகவல்கள் அனைத்தையும் தொகுத்தும் பகுத்தும் தரும் அவர்களின் ஆழ்ந்த அறிவாற்றலைக் கண்டு வியப்படைவேன்.

டான்ஸ்ரீ மு .சோமசுந்தரனார் அவர்களும் அவரின் துணைவியார் புவான்ஸ்ரீ தெய்வானை ஆச்சி அவர்களும் என் இல்லத்தினரிடம் பொழிந்த அன்பிற்கும் அளித்த உதவிகளுக்கும் அளவில்லைஅவர்கள் என் ஊரினர் ஆதலின் எனமகள் .. திருமணத்திற்கு வந்து வாழ்த்தி அருளினார்கள்அவர்களின் . முத்து விழா நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு ,மணிவிழா வாழ்த்துப் பெறும் பேறும ் எனக்குக் கிட்டியதுஎன் குடும்ப .

நலத்தில் அடிக்கடி அக்கறையும் ஆர்வமும் காட்டி வருவது அவர்கள் வழக்கமாகவே இருந்ததுஆச்சியின் மறைவு குறித்து . நான் எழுதிய இரங்கலுரையை அவரின் நினைவுப் பிரார்த்தனை .நூலில் டான்ஸ்ரீ வெளியிட்டார்கள்தீபாவளிபொங்கல் வாழ்த்து , ஆண்டுதோறும் தவறாது எனக்கு அனுப்புவது டான்ஸ்ரீ வழக்கமாகும்..

டான்ஸ்ரீ முசோமசுந்தரனா.ரின் தந்தையார் முத்தையா செட்டியார் அவர்களின் அறிவாற்றலையும் ஆலோசனை கூறும் திறத்தையும் பாராட்டி அவர்களை எங்களூரார் லாயர் முத்தையா செட்டியார் என்று அழைப்பார்கள் .
டான்ஸ்ரீ முசோமசுந்தரனா.ரின் மாமனார் சைவப் பெரியார் கா . இராமனாதன் செட்டியார் அவர்கள் நகரத்தார் மரபில் முறையாகச் சட்டம் பயின்று வழக்கறிஞர் தொழில் நடத்திய .முதல்வர் ஆவார்
டான்ஸ்ரீ அவர்களின் பொருளியல் புலமைக்கும் நிதிநிருவாகத் திறனுக்குத் தந்தைவழித் தொடர்பும்அருள் , நெறி ஆற்றலுக்கும் பணிக்கும் மாமனார்வழித் தொடர்பும் பேருதவியாக இருந்தன.

“எய்தற் கரிய இயைந்தக்கால் அந்நிலையேசெய்தற்கரிய செயல்” என்பதற்கேற்ப மதுரை காமராசர் பல்கலைக்கழத்தில் சைவசித்தாந்தத்துறைப் பேராசிரியர் இருக்கை ஏற்பட நிதி திரட்டும் பணியில் டான்ஸ்ரீ எடுத்துக்கொண்ட அயரா முயற்சியையும் நான் நன்கு அறிவேன்மலேயா அருள்நெறித் . திருக்கூட்ட வளர்ச்சிக்குப் பெரும்பங்காற்றியவர் டான்ஸ்ரீ சைவ .என்பதை யாரும் மறுக்கவோ மறக்கவோ முடியாது சைவமடங்கள் ,சைவ ஆதீனங்கள் ,சித்தாந்தப் பெருமன்றம் ஆற்றும் நற்பணிகளுக்கெல்லாம் நன்கொடை வழங்கிய நல்லுள்ளம் கொண்டவர் டான்ஸ்ரீ. அவர்களின் மறைவு சைவத் தமிழ் உலகிற்குப் பேரிழப்பாகும்.

பொதுவாகப் பொதுப்பணியில் மிகுதியாக ஈடுபட்டுப் பெரும்பங்காற்றுபவர்கள் தம் குடும்பத்தை நன்கு கவனிப்பதில்லை என்று குறை கூறுவர்ஆனால் டான .்ஸ்ரீ

அவர்களோ அடக்கத்தின் உறைவிடமாக விளங்கிய தம் மனைவியாரின் உற்ற துணையுடன் தம் குடும்பத்தை நல்லதோர் பலகலைக் கழகமாக உருவாக்கியுள்ளார்கள் என்றே கூறவேண்டும்இதற்கு அவரின் மக்களும் மருமகன்மாரும் . பலதுறையிலும் சிறப்புறப் பணியாற்றி வருவதே சான்றாகும். “தக்கார் தகவிலார் என்பது அவரவர் எச்சத்தாற் காணப்படும்” அன்றோ?

டான்ஸ்ரீ பேராற்றல்அவருக்குப் .மிக்கவர்கள் -பெயராற்றல் - இது பிறைசூடிய .பெற்றோர் இட்ட பெயர் சோமசுந்தரம் சிவபெருமான் பெயரன்றோ? பின்னாளில் இவர் பதவிக்காலத்தில் சுருக்கமாக வைத்துக்கொண்டு பெருவழக்காக வழங்கிய பெயர் எம் எஸ் சுந்தரம் இப்பெயர்.“பித்தா பிறைசூடி” என்று தொடங்கித் தேவாரம் பாடியதோடு அடியார் பெருமையை அகிலத்திற்கு அறிவிக்கத் திருத்தொண்டத்தொகை தந்த திருநாவலூரர் பெயரன்றோ? இவ்வாறு ஆண்டவன் பெயரையும் அடியார் பெயரையும் ஒருசேரத் தாங்கிய டான்ஸ்ரீ பேராற்றல் உடையவர்தானே? சோம சுந்தரர் ஆலவாய்ச் சொக்கநாதராக ஆடிய திருவிளையாடல்களுக்கு நிகருண்டோ? அதனை நினைவு படுத்துவது போல டான்ஸ்ரீ நினைவாக அவரின் குடுமபத்தார் சொக்கநாத வெண்பா என்னும் இந்நூலை வெளியிடுவது பொருத்தமே ஆகும்.

சிங்கப்பூர் அருள்மிகு தண்டாயுதபாணி கோயில் திருக்குடநீராட்டு விழாவிற்கு முதல்நாள் மணி அளவில் 00 8 அன்றிரவு 2009 11 26 நடைபெற்ற திருமுறைக்கோயில் நிறுவிய விழாவில் திருப்பனந்தாள் ஆதீனகர்த்தருடன் கலந்துகொண்டு காளாஞ்சி பெற்று மகிழ்ந்த நிகழ்ச்சியே டான்ஸ்ரீ முசோமசுந்தரனார் . அவர்கள் என்னுடன் கலந்துகொண்ட இறுதி நிகழ்ச்சி ஆகும்.

பிறகு கோலாலம்பூர் மருத்துவ மனையில் அவர்களை மயக்கமுற்ற நிலையில் 3-12- அன்று 2009பார்த்துத் திருமுறை பாடித் தொழுது வந்தேன் அன்று 2009 12 9 பிறகு .கோலாலம்பூரில்

நடைபெற்ற அவரின் இறுதிச் சடங்கில் கலந்துகொண்டேன். அன்னாரின் ஆன்மா சாந்தி அடைய ஆண்டவனை வேண்டிக்கொண்டேன்.

டான்ஸ்ரீ மு 40 சோமசுந்தரனார் அவர்களுடன் நான் கொண்ட . ஆண்டுநட்பு நவில்தொறும் நூல் நயம் போன்றது .நுனிக் கரும்பு தொடங்கி அடிக்கரும்பு வரை சுவைப்பது போன்று இனியது .உறவு பயில்தொறும் பண்புடையாளர் தொடர்பு போன்றது; அன்பு வளர்பிறை போன்றது'.என்றும் என் நெஞ்சைவிட்டு நீங்காத . .ஒன்று

பொருள்நெறி போற்றி வளர்த்தவர் பின்னர்
அருள்நெறிக்கு ஆக்கம் அளித்தார் – மருள்நெறி
சென்றகலச் செய்ததமிழ்ச் செம்மலாம் சுந்தரரை
என்றுநான் காண்பேன் இனி?

எளிமை பணிவுடன் ஈன்றெடுத்த ஏந்தல்
தெளிவான சிந்தனை தேர்ந்தமெய்ஞ் ஞானத்தார்
நன்றாய் விருந்தோம்பும் நண்பராம் சுந்தரரை
என்றுநான் காண்பேன் இனி?

திண்ணப்பன்.சுப 2009 12 25
சிங்கப்பூர்